வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—இசை அமுதா

தேதி—4.11.2026 நேரம்-மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

பாரா ஆசிய விளையாட்டு போட்டிகளில், 114 பதக்கங்களை வென்று திரும்பியுள்ள, இந்திய **பாரா விளையாட்டு வீராங்கனை**களை, பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, புதுடெல்லியில் சந்திக்கிறார்.

நாட்டின் **தூய எரிசக்தி திட்டத்தை** மேலும் வலுப்படுத்தும் வகையில், **92 கிகாவாட் மின்சாரத்தை சேமித்து வழங்கும்** வசதிகளை நிறுவும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முப்படைகளில், **அக்னிவீரர்களின்** நான்காண்டு பணிக் காலத்தை, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

மத்திய **உணவு மற்றும் பொது விநியோகத் துறை** இணை அமைச்சர் திருமதி **நிமுபென் பம்பானியா**, இன்று, புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை, மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

மோடி-விளையாட்டு

ஜப்பானில் நடைபெற்ற, **பாரா ஆசிய விளையாட்டு போட்டி**களில், 30 தங்கம் உட்பட, 114 பதக்கங்களை வென்று திரும்பியுள்ள, இந்திய **பாரா விளையாட்டு வீராங்கனை**களை, பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, புதுடெல்லியில் சந்தித்துக் **கலந்துரை**யாடுகிறார். தலைநகரில் உள்ள **இந்திராகாந்தி விளையாட்டு வளாகத்தில்** நடைபெறும் இந்நிகழ்ச்சியில், இந்திய ஒலிம்பிக் சங்கம், பாராலிம்பிக் கமிட்டி, மற்றும் பல்வேறு **விளையாட்டு**களுக்கான **தேசியக் கூட்டமைப்பு**களின் பிரதிநிதிகளும், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சகத்தின் உயர் அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர். **பாரா**

ஆசிய விளையாட்டு போட்டிகளில், இந்தியாவின் சார்பில், 97 பாரா வீரர்-வீராங்கனைகள் பங்கேற்றதும், இவர்கள் வென்றுள்ள 114 பதக்கங்கள், இந்தியாவை பொறுத்தவரை, **இதுவரை இல்லாத சாதனை** என்பதும் குறிப்பிடத் தக்கது.

அமைச்சரவை

நாட்டின் **தூய எரிசக்தி திட்டத்தை** மேலும் வலுப்படுத்தும் வகையில், மணிக்கு 92 **கிகாவாட் மின்சாரத்தை சேமித்து வழங்கும்** வசதிகளை நிறுவும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. **மின்கல வசதி**களுக்கு அப்பாற்பட்டு, உபரி மின்சாரத்தை **நிலை ஆற்றலாக** சேமித்து வைத்து, பின்னர், **மீண்டும் நீர் மின்சார உற்பத்திக்குப்** பயன்படுத்தும் வசதிகளும், இதில் அடங்கும். மத்திய **தகவல்-ஒலிபரப்பு அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ்,** இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம், இதை தெரிவித்தார். மின்சாரத்தை **சேமித்து வழங்கும் வசதிகள்,** எல்லா மாநிலங்களுக்கும் **சமமாக கிடைப்பதை** உறுதிப்படுத்தும் வகையில், மாநில அரசுகளின் ஒருங்கிணைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று, அவர் கூறினார். தற்போது, நாட்டின் **மொத்த மின்சார உற்பத்தித் திற**னில் 52 சதவிகிதம், **புதை படிவமல்லாத எரிபொருள்** அடிப்படையில் செயல் படுவதாகவும், **தூய எரிபொருள் பயன்பாட்டில்,** இது, **உலகிற்கே புதிய உதாரணம்** என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முப்படைகளில், **அக்னிவீர் ஜவான்**களின் நான்காண்டு பணிக்காலத்தை, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. முப்படைகளின் **தலைமை தளபதி** ஜென்ரல் **ராஜா சுப்பிரமணி,** மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர், இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். தற்போது, முதல் தொகுப்பு **அக்னிவீர் ஜவான்**கள், நான்காண்டு பணிக்காலத்தை முடிக்கும் தறுவாயில் உள்ளதாகவும், இவர்களில் 25 சதவிகிதம் பேர், ஏற்கனவே உள்ள திட்டத்தின் கீழ், பாதுகாப்புப் படைகளில் நிரந்தரமாக சேர்த்துக் கொள்ளப்பட்டு, எஞ்சியுள்ள 75 சதவிகிதம் பேருக்கு, **இரண்டாண்டு நீட்டிப்பு**

வழங்கப்படும் என்றும், அவர் கூறினார். மத்திய அமைச்சரவையின் இதர முடிவுகள் குறித்து, ஒரு செய்தி தொகுப்பு.....

நாட்டின் புள்ளி விவரக் கட்டமைப்பு, பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி வசதிகளில் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான **விஸ்தார்** என்னும், **விக்சித் பாரத் முன் முயற்சி திட்டத்திற்கு**, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் 4 ஆயிரத்து 371 கோடி ரூபாய் செலவில், 2030-31 ஆம் ஆண்டு வரை அமலாக உள்ள இத்திட்டத்தின் கீழ், நாட்டின் அதிகாரப்பூர்வ புள்ளியியல் கட்டமைப்பின் தரத்தை உயர்த்தவும், மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் எல்லா செயல்பாடுகளையும் டிஜிட்டல் மயமாக்கி, எதிர்கால தேவைகளுக்கு ஏற்றதாக மேம்படுத்தவும், முக்கியத் துவம் அளிக்கப்படும். புள்ளி விவர சேகரிப்பு, தரவு நிர்வாகம் உட்பட எல்லாப் பணிகளிலும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை அதிகரிப்பதால், திட்டமிடல் பணிகளுக்குத் தேவையான, தரவுகள், மற்றும், பகுப்பாய்வு முடிவுகளை உடனுக்குடன் பெற ஏதுவாகும் என்று, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுஅல்லாது, முக்கிய கனிமங்களுக்கான **பதனீட்டு வசதி**களைப் பெருக்குவதற்கான மூலதன செலவுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், மொத்தம் **2 ஆயிரத்து 814 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு** அடிப்படையில், 5 ஆண்டுகளுக்கான, தனி திட்டம் ஒன்றை செயல்படுத்தவும், மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. தற்போது பூகோள ரீதியில், குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே, இந்த வசதிகள் **அமைந்திருப்பதால் ஏற்படும் சிரமங்**களைப் போக்கவும், முக்கிய கனிமங்களின் **விநியோக சங்கிலி**யில் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்தவும், இத்திட்டம் உதவிகரமாக இருக்கும் என, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ராஜ்நாத்

அக்னிவீரர்களின் பணிக்காலத்தை 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதான, மத்திய அரசின் முடிவை, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வரவேற்றுள்ளார். இதற்கென பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், எதிர்கால போர் முறைகளுக்கு ஏற்ற

தொழில் நுட்பத் திறனுடன் கூடிய, வலுவான, இளம் படையாக, இந்திய ராணுவத்தை மேம்படுத்த, இதனால் ஏதுவாகும் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். 4 அல்லது 6 ஆண்டு பணி முடிக்கும் அக்னிவீரர்கள், தகுதி மற்றும் சுயவிருப்பத்தின் அடிப்படையில், நிரந்தர ஜவான்களாக சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பும், தற்போது உருவாகி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்

புதுச்சேரி-சந்திப்பு

அரசு முறைப் பயணமாக புதுச்சேரி வந்திருந்த, மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணை அமைச்சர் திருமதி நிமுபென் பம்பானியா இன்று லோக்நிவாசில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை, மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். துணை நிலை ஆளுநர், மத்திய இணை அமைச்சரை பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். தொடர்ந்து தனியார் விடுதியில் மத்திய இணை அமைச்சர் நடத்திய மறுஆய்வுக் கூட்டத்தில் மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை-நீலேகனி

தேர்வு சீர்திருத்தம் குறித்து மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட, **உயர் அதிகார பணிக் குழு உறுப்பினர்கள்,** அதன் தலைவர் திரு நந்தன் நீலேகனி தலைமையில், இன்று சென்னையில், தமிழக முதலமைச்சர் திரு விஜயை சந்தித்தனர். உயர் கல்வி மாணவர் சேர்க்கைக்கு, நீட் மற்றும் இதர தேர்வுகளை நடத்துவதற்கு எதிரான நிலைப்பாட்டையும், 12-ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், மாணவர் சேர்க்கை நடத்தப்பட வேண்டும் என்பதையும், தமிழக அரசு ஏற்கனவே தெளிவுபடுத்தி இருப்பதாக, இன்றைய கூட்டத்தின் போது, பணிக் குழுவிடம் எடுத்துக் கூறப்பட்டது. நீட் தேர்வை ஆட்சேபித்து தமிழக சட்டமன்றத்தில் ஏற்கனவே, ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருப்பதையும் தமிழக அரசு சுட்டிக்காட்டி உள்ளது.

ரயில்வே

இந்திய ரயில்வே இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில், 145 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டு, புதிய சாதனை படைத்துள்ளது. கடந்த

ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில், இது 8 சதவிகித வளர்ச்சியாகும், இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு.....

(வாய்ஸ்)

இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில், ரயில்வே துறையால் கையாளப்படும் உணவு தானியங்களின் அளவு 26 சதவிகிதமும், உள் நாட்டு நிலக்கரியின் அளவு 16 சதவிகிதமும், இரும்புத் தாதுவின் அளவு, 5 சதவிகிதமும், சிமெண்ட் உற்பத்திக்கான கிளிங்கர் மூலப்பொருளின் அளவு 10 சதவிகிதமும் அதிகரித்துள்ளது. அனல் மின்நிலையங்களின் அதிக தேவைக்கு ஏற்ப, நிலக்கரி எடுத்துச் செல்லும் சரக்கு வாகனங்களின் எண்ணிக்கையும், தினசரி 470-ஆக உயர்த்தப்பட்டதாக, ரயில்வே துறை தெரிவித்துள்ளது. அதிக சரக்குகளை கையாண்டு அதிக வருவாய் ஈட்ட, ரயில்வே துறை மேற்கொண்டு வரும் முயற்சிகள், நாட்டின் சரக்கு போக்குவரத்து துறையை வலுப்படுத்துவதிலும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், அதன் முக்கிய பங்களிப்பை வெளிப்படுத்துகின்றன. இதுஅல்லாது, இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் ரயில்வே துறையில் பயணிகளின் எண்ணிக்கையும், 64 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்தாண்டு இதேகால கட்டத்தில் இது, 63 கோடியாக இருந்தது.

வானிலை

வளிமண்டல சுழற்சிகள் காரணமாக, இன்று, கோவை, நீலகரி, புதுச்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் ராமநாதபுர மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், இடி-மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 10-ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, ஆந்திர கடலோரப் பகுதிகள், மற்றும், மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில்

அதிகபட்சமாக ஈரோடு மாவட்டம் தாழ்குனி பகுதியில் 9 செமீ மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே, இன்று ஆக்லாந்தில் நடைபெற்ற முதலாவது **ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி**யில், இந்தியா, 56 பந்துகள் எஞ்சி இருந்த நிலையிலேயே, 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் முதலில் ஆடிய நியுசிலாந்து அணி, 40.2 ஓவரில், 185 ரன்னுக்கு ஆட்டம் இழந்ததைத் தொடர்ந்து, மழை காரணமாக **DLS** முறையில் நிர்ணயிக்கப்பட்ட, **32 ஓவரில் 143 ரன்** என்னும் வெற்றி இலக்கை நோக்கி 2-ஆவதாக ஆடிய இந்திய அணி, 22.4 ஓவரில், 5 விக்கெட் இழப்பிற்கு, 143 ரன் எடுத்து வெற்றி பெற்றது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது, 1க்கு- பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. தொடரின் 2-ஆவது போட்டி, வரும் சனிக்கிழமை, வெலிங்டனில் நடைபெறும்.

பொது கணக்கு

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் **பொதுக் கணக்குக் குழுத் தலைவர்**களுக்கு இடையே, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 2 நாள் மாநாடு, இன்று முடிவடைந்தது. **மக்கள் பணம்,** திறம்பட்ட முறையில் செலவிடப் படுவதை கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு முறையாக உறுதிப் படுத்துவதே, **பொது கணக்குக் குழு**வின் பணி என்றும், **மக்கள் பணத்தை** செலவிடுவதில், நிதி ஒழுங்கு, வெளிப்படைத் தன்மை, நேர்மையான **தணிக்கை நடைமுறை**களை பின்பற்றுதல் அவசியம் என்றும், மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, தமது நிறைவுரையில் கூறினார். நாடாளுமன்ற பொதுக் கணக்கு குழுவின் தலைவர் திரு கே சி வேணுகோபால், கேரள சட்டமன்றத்தின் பொது கணக்கு குழுத் தலைவர் திரு பாலகோபால் உள்ளிட்டோர், நிறைவு விழாவில் உரையாற்றினர்.

உடன்பாடு

தெற்குலக நாடுகளின் அறிவியல்-தொழில் நுட்ப வசதிகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதில் ஒத்துழைப்பது குறித்து, இந்தியாவின் அறிவியல்-தொழில் ஆராய்ச்சிக் கழகம், தெற்குலக நாடுகளின்

DAKSHIN-தகைசால் மையத்துடன், ஒத்துழைப்புக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளது. தெற்குலக நாடுகளுக்கு இடையே அறிவியல்-தொழில் நுட்பத் தீர்வுகளை பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பாக இந்த ஏற்பாடு அமையும் என மத்திய அறிவியல்-தொழில் நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பாரா ஆசிய விளையாட்டு போட்டிகளில், 114 பதக்கங்களை வென்று திரும்பியுள்ள, இந்திய **பாரா விளையாட்டு வீராங்கனை**களை, பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, புதுடெல்லியில் சந்திக்கிறார்.

நாட்டின் **தூய எரிசக்தி திட்டத்தை** மேலும் வலுப்படுத்தும் வகையில், **92 கிகாவாட் மின்சாரத்தை சேமித்து வழங்கும்** வசதிகளை நிறுவும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முப்படைகளில், **அக்னிவீரர்களின்** நான்காண்டு பணிக் காலத்தை, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

மத்திய **உணவு மற்றும் பொது விநியோகத் துறை** இணை அமைச்சர் திருமதி **நிமுபென் பம்பானியா**, இன்று, புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை, மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.
